# பட்டினப்பாலையில் பண்டமாற்று முறைகள்

**பா.தமிழரசி**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஊற்றங்கரை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### முன்னுரை

பண்டையத் தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை முறைகளைச் சித்தரித்துக் காட்டுகின்றன. அவ்வாறு வாழ்க்கை நிகழ்வுகளைச் சித்திரித்துக்காட்டிய பத்துப்பாட்டில் ஒன்பதாவது நூலாகவும், 301 அடிகளைக் கொண்டும், அகப்பொருளை உணர்த்துவதாகவும், சோழமன்னன் கரிகாலச்சோழனை பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு கடியலூர் உருத்திரக்கண்ணனார் என்ற புலவரால் பாடப்பெற்றது பட்டினப்பாலை நூலாகும். இந்நூலில் அக்கால மக்களின் பொருளாதாரமும், வாணிகமும், கிராமியச் சூழ்நிலையை அடிப்படையாகக்கொண்ட நாகரிகமுறைகள் எனக் தமிழர்களின் வரலாற்றைப் பேசுகிறது. இத்தகைய சிறப்புவாய்ந்த பட்டினப்பாலையில் பொருளுக்கு ஆதாரமான வணிகம் மற்றும் பண்டமாற்று முறைகளின் கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### பெயர்க்காரணம்

பட்டினம் + பாலை – பட்டினப்பாலை, பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினம், பாலை – பாலைத்திணையைக் குறிக்கும். மேலும் பாலைத்திணைக்குரிய ஒழுக்கமாக பிரிதலும், பிரிதல் நிமித்தம் என்று பகுக்கப்பட்டுள்ளது.

### சோழ நாட்டின் சிறப்பு

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முந்தைய காலச்சூழலில் சோழநாட்டின் தலைநகரமாக விளங்கிய பகுதி காவிரிப்பூம்பட்டினமாகும். இப்பட்டினப்பகுதியில் கற்பு நெறியில் இல்லற வாழ்க்கை வாழ்கின்ற தலைவன், பொருள் தேடும்பொருட்டு தலைவியைப் பிரியக்கூடிய சூழல் ஏற்படுகிறது. இச்சூழலைத் தலைவி குறிப்பால் உணர்ந்ததும், தலைவனைப் பிரிந்து தனிமையில் வாழும் கொடியநிலைக்கு ஆட்பட்டுவிடுவோமா என்று நெஞ்சம் கலங்கினாள். அதைக்கண்ட தலைவன் சோழநாட்டை ஆண்ட திருமாவளனின் சிறப்புடைய நகரம், எல்லா வளமும்கொண்ட காவிரிப்பூம்பட்டினத்தையே நன்கொடையாகப் பெறுவதாக இருந்தாலும் நான் என் தலைவியைவிட்டுப் பிரியமாட்டேன். மேலும் அவளுடைய மென்மையான அகன்ற தோள்கள் திருமாவளவனின் செங்கோலைக் காட்டிலும் குளிர்ந்த தன்மையானவை. அப்படிப்பட்ட அவளைப் பிரிவது என்பது வளவன் பகைவர் மேல் எறியும் வேலைக்காட்டிலும் கொடுமையானது. அதனால் எம் தலைவியை விட்டுப்பிரியமாட்டேன் என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறுவதை,

**“முட்டாச்சிறப்பின் பட்டினம் பெறினும்**
**வார் இருங்கூந்தல் வயங்குஇழை ஒழிய**
**வாரேன் வாழிய நெஞ்சே கூர் உகிர்க;” (பட்டினம் :218 – 220)**

என்ற பாடல் வரிகள் தலைவனின் உள்ளத்தைப் புரிய வைப்பதை அறியமுடிகிறது.

மேலும், தலைவன் தலைவிக்காகப் பிரிய இருக்கும் செலவைச் சிறிது தள்ளிப் போடுகின்றான். தலைவியை ஆற்றுவித்தற்பொருட்டு இச்செயலை மேற்கொள்கிறான் என்பதை, தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது.

**“செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**
**வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும;” (தொல் - கற்பு – 44)**

எனத் தொல்காப்பியர் தலைவனுக்கான அறத்தை இவ்வரிகளின் வழியாக வெளிப்படுத்துகிறார்.

குவிந்திருக்கும் பண்டங்கள்

‘திரை கடலோடியுந் திரவியம் தேடு’ என்பது பழமொழி. வியாபாரத்திற்காகக் காவிரிப்பூம்பட்டினத்திலே பல பண்டங்கள் வந்து குவிந்திருக்கின்றன. அவை உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வந்தவை. அயல்நாட்டிலிருந்து கடல்வழியே வந்த குதிரைகளும், உள்நாட்டிலிருந்து வண்டிகள் மூலம் வந்த கரிய மிளகுப்பொதிகளும், வடக்கில் உள்ள மேருமலையில் உண்டான மாணிக்கமும், உயர்ந்த பொன் வகைகளும், மேற்குத்தொடர்ச்சி மலையிலே விளைந்த சந்தனக்கட்டைகளும், அகிலும், தென்கடல் முத்தும், கீழ்க்கடல் பவளமும், கங்கை நதி பாயும் நிலங்களிலே விளைந்த செல்வங்களும், காவிரியில் கிடைத்த பயனுள்ளபொருட்களும், இலங்கையிலிருந்து வந்த உணவுப்பொருட்கள், பர்மாவிலிருந்து வந்த பல வகையான செல்வங்களும் இன்னும் பல அருமையான பண்டங்களும், மிகுதியான செல்வங்களும் பூமி தாங்கமுடியாமல் நெளியுமாறு ஒழுங்குகூடிய தெருக்களில் சூழ்ந்திருந்த அழகு அளவற்றது.

**“நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியுமஇ பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும் குணகடல் துகிலும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி” (பட்டினம் : 185 – 192)**

எனக் குவிந்திருக்கும் பண்டங்களை இவ்வரிகள் தெளிவாகப் புலப்படுத்துவதை அறிந்துகொள்ள முடிகிறது.

**பண்டமாற்று முறைகள்**

பண்டமாற்று முறை என்பது தமக்கு தேவைப்படும் பொருளுக்கு நிகராகவோ அல்லது மாற்றுப் பொருளாகவோ கொடுத்துக் பெற்றுக்கொள்ளுதலே பண்டமாற்று முறையாகும். இம்முறையின் மூலமாக மக்கள் அவரவர்கள் விரும்பும் பொருளைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியாகவும், செல்வவளத்துடனும் வாழ்ந்திருந்தார்கள்.

சோழநாடு குடிமக்களை அதிகமாகக்கொண்ட செழிப்பான பகுதியாகும். அம்மக்கள் பெரிய வீடுகளிலே வறுமை அறியாமல் செழிப்பான வாழ்க்கை நடத்தி வந்துள்ளனர். பெரிய வீட்டின் அகலமான முற்றத்திலே நெல்லைக் காயவைத்து காவல் காத்துக்கொண்டிருப்பர். அப்போது அந்நெல்லைக் கோழிகள் தின்ன வரும்பொழுது, காவல் காத்துக்கொண்டிருந்த அழகான நெற்றியை உடைய நல்ல அணிகலன்களை அணிந்த அப்பெண்கள் தங்கள் காதுகளில் அணிந்திருந்த பொற்குழைகளைக் கழற்றியெறிந்து விரட்டுவர். அவ்வாறு எறிந்த அக்குழைகள் முற்றத்திலே சிதறிக்கிடக்கும். அச்சூழலில், சிறுதேரினை உருட்டி விளையாடும் பொன்னணியைக் காலிலே அணிந்த சிறுவர்களின் தேர்ச்சக்கரத்தை மகளிர் எறிந்த கனங்குழைகள் புரட்டிவிடும்.

**“அகனகர் வியன் முற்றத்துச்**
**சுடர்நுதல் மடநோக்கின்**
**நேர் இழை மகளிர், உணங்கு உணாக் கவரும்**
**கோழி யெறிந்த கொடுங்கால் கனங்குழை**
**பொற்கால் புதல்வர் புரவியின்று உருட்டும்**
**முக்கால் சிறுதேர் முன் வழிவிலக்கும்” (பட்டினம் : 20 – 25 )**

சோழநாட்டிலே செல்வச்செழிப்புடன் குடிமக்கள் வாழ்ந்தனர் என்பதை மேற்கண்ட பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

நெல்லைத் தின்ன வந்த கோழிகளின் மேல் பெண்கள் தம் காதணிக் குழைகளைக் கழற்றி எறிந்தனர் என்பதனால் ஆபரணப் பொருட்கள் சோழ நாட்டில் அதிகமாக இருந்தன என்று கூறுவது சரியானதாக இருக்காது. ஏனென்றால் இவர்கள் வாழ்கின்ற இடம் உப்பை மட்டுமே விளைவித்து பெறுகின்ற கடல் புறப்பகுதியாகும். அதனால் வேறு நிலப்பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு உப்பைக் கொடுத்து பண்டமாற்றாக நெல்லை வாங்கி இருக்கலாம் என்பதால் நெல்லிற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்துள்ளனர்.

கடற்கரைப் பகுதியில் உப்பங்கழிகளில் வசிக்கும் வலிமையான படகுகளில் வெள்ளை உப்பினைப் பண்டமாற்றம் செய்வதற்காக ஏற்றி வருவார்கள். உப்பினது விலையைச் சொல்லி நெல்லை வாங்குவார்களாம். நெல்லோடு வந்த படகுகளை உப்பங்கழிகளின் தறிகளில் வரிசையாகக் கட்டி வைப்பர். அக்காட்சியானது குதிரைகள் கட்டப்பட்டிருப்பதைப் போன்று தோற்றமளித்தன.

**“வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லோடு வந்த வல்வாயப் ப.்றி**
**பணை நிலைப் புரவியின் அணை முதல் பிணிக்கும்**
**கழி சூழ் படப்பை கலியாணர்ப்” (பட்டினம் : 29 – 32)**

இப்பாடல் வரிகள் மூலம் பண்டமாற்று முறைகளில் தமக்குத் தேவையான பொருளைப் பெற்று சோழ நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தார்கள் என்று அறிந்துகொள்ள முடிகிறது.

**வணிகர் நேர்மை**

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகர்கள் தம் குடிக்கு வரக்கூடிய பழிக்கு அஞ்சி எப்போதும் உண்மையையே பேசுவார்கள்; பிறர் பொருளைப் பறிக்கவேண்டும் என்ற பேராசையில்லாதவர்கள் நடுநிலையிலே நின்று வியாபாரம் செய்வார்கள். அவர்கள் விற்பனைசெய்யும் பண்டங்களின் கொள்முதல் விலையையும், இலாபத்தையும் வெளிப்படையாகக்கூறி வியாபாரம் செய்வார்கள். அவ்வாறு விற்றும், வாங்கியும் வாணிகம் செய்து தொன்றுதொட்டு ஈட்டிய செல்வத்தை உடையவராய், நீண்ட நுகத்தடியிலே தைத்திருக்கும் நடுஆணி போல் நடுநிலையிலே நிற்கும் நல்ல உள்ளமுடையவர்களாய் வணிகர்கள் இருந்தனர்,

**“நெடுநுகத்துப் பகல்போல**
**நடுவுநின்ற நன்னெஞ்சினோர்**
**வடுஅஞ்சி வாய் மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்ப நாடி**
**கொள்வதூஉம் மிகை கொளாது**
**கொடுப்பதூஉம் குறை கொடாது”. (பட்டினம் : 206 – 211)**

பண்டைய வணிகர்கள் அறத்துடன்கூடிய வாணிகத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர். இதையே, வள்ளுவரும் வாணிகம் நடுவுநிலையுடன் நடைப்பெற வேண்டும் என்ற முறையை,

**“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்” - (குறள் : 120)**

என்ற குறளின் மூலமாக கூறுவதை உணர்ந்துகொள்ள முடிகிறது. தற்காலச் சூழலில் வணிகம் இலாப நோக்காகவே பார்க்கப்பட்டு வருகிறது. வாணிபம் செய்பவர்களின் எண்ணம் அதிக இலாபத்தை ஈட்டும் நோக்கமாகக் காணமுடிகிறது.

**பல மொழிகள் கற்றறிந்த வணிகர்கள்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாடடினர் வேறு பல நாட்டினருடன் வாணிகம் செய்து வந்துள்ளனர். வேளாளர்கள், வணிகர்கள் மற்றும் வாணிகத்தின் காரணமாக வந்த அயல்நாட்டவர்கள் பல மொழிகளைக் கற்று காவிரிப்பூம்பட்டினத்தில் வாழும் மக்களோடு கலந்து நீண்டநாள் மகிழ்ச்சியாக தங்கி வாழ்ந்திருந்தார்கள்.

**“….பல் ஆயமொடு பதி பழகி**
**வேறு வேறு உயர்ந்த முதுவாய் ஒக்கல்**
**சாறு அயர் மூதர் சென்று தொக்காங்கு**
**மொழி பல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம பெயர் மாக்கள் கலந்தினி துறையும்”(பட்டினம் : 213 – 217)**

வாணிபத்தின் மூலம் மக்கள் பல மொழி பேசுபவர்களிடமும் பல பழக்கவழக்கங்கள், பண்பாடு கொண்டவர்களுடனும் ஒன்றுகூடி வாழ்ந்ததன் மூலம் மொழிகள் கற்று பண்டைய காலத்திலேயே தங்களுடைய அறிவையும், வாணிபத்தையும் விரிவுபடுத்தியுள்ளனர். இன்று நம்மில் பலர் அயல்நாடுகளுக்கு வேலைக்கு செல்வது இதன் எச்சமே ஆகும்.

**சுங்க வரி**

இக்காலத்தில் இருப்பதைப் போலவே பண்டையக் காலத்திலும் இறக்குமதி பொருள்களுக்கும் ஏற்றுமதிப் பொருள்களுக்கும் அரசாங்கம் வரி விதித்து வரிகளைப் பெற்றுள்ளது. இவ்வரிகளுக்கு ‘உல்கு’, ‘சுங்கம்’ என்ற பெயர்களும் வழங்கப்பட்டு உள்ளன இத்தகைய வரியே அரசாங்கக் கருவூலத்தின் முக்கிய வருமானமாகவும் இருந்துள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்திலும் பிற துறைமுகங்களிலும் பயன் தொலைதலே அறியாத யவனர்களின் இருப்பிடங்களும் மரக்கலங்கள்மூலம் வருகின்ற செல்வங்களுக்காகத் தம் நாடுவிட்டு நாடு செல்லும் கடலோடிகள் பலப்பல நாட்டினருமாகத் தம்முள் கலந்திருந்து வாழ்ந்து விளங்குகின்ற கடற்கரையோரக் குடியிருப்புகளில் பிற நாட்டவர்கள் வாழ்ந்திருந்தனர். அத்தகைய சேரியொன்றினைச் சிலப்பதிகாரக் காப்பியம்

**“பயனற வறியா யவனர் இருக்கையும்**
**கலந்திரு திருவின் புலம்பெயர் மாக்கள்**
**கலந்துஇருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்” (சிலம்பு : 5: 10 – 12)**

எனக் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. பிற நாடுகளிலிருந்து கடல்மார்க்கமாக வந்த பண்டங்களை நிலத்திலே இறக்கவும் உள்நாட்டிலிருந்து தரைமார்க்கமாக வந்த பண்டங்களைப் பிற நாடுகளுக்கு அனுப்புவதற்காகக் கடலில் உள்ள கப்பல்களில் ஏற்றவும் அளவற்ற பண்டங்கள் வந்து குவிந்து கிடந்ததையும் அப்பண்டங்கள் மீது புலி முத்திரை பொறித்து வெளியிலே அனுப்பிய நல்ல பாதுகாப்பையும் சிறந்த காவலையும் உடைய சுங்க சாவடிகளைப் பற்றி

**“நீரினின்று நிலத் தேற்றவும்**
**நிலத்தினின்று நீரப் பரப்பவும்**
**அளந்தறியா பல பண்டம்**
**புலி பொறித்துப் புறம் போக்கி” (பட்டினம் : 129 – 135)**

என்ற வரிகளின் வாயிலாக அறியமுடிகிறது. ஓவ்வொரு பொருளின்மீதும் சோழ நாட்டின் முத்திரையைப் பொறிப்பது அந்தப்பண்டம் எந்த நாடுகளுக்குச் செல்கிறதோ அங்கெல்லாம் சோழனின் பெருமையும், புகழையும், தமிழ் மொழியையும் பரவுவதெற்கே அம்மன்னன் செய்திருக்கலாம். இன்றளவிலும் ஒரு பொருளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும்போது அந்தப் பொருள் உற்பத்தியான நாடு, தேதி போன்றவைக் குறிப்பிடப்படுவது வழக்கமாக உள்ளதைக் காணமுடிகிறது.

**ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள்**

தமிழ்நாட்டில் பிறநாட்டவர் உள்ளத்தைக் கவரும் பல பொருட்கள் மிகுதியாக கிடைத்துள்ளன. அவற்றுள் முத்தும், பவளமும், ஆரமும், அகிலும், வெண்துகிலும், சங்கும், மிளகும் குறிப்பிடத்தக்கவையாக இருந்துள்ளன. யவனர் என்பவர் கிரேக்கர்களும் உரோமானியர்களும் ஆவார். அவர்கள் பொன்னொடு சோழ நாட்டிற்கு வந்து மிளகொடு தமது நாட்டிற்கு சென்றதை,

**"யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" - (அகம் 149 : 9-10)**

என அகநானூற்று பாடல்வரி மூலமாக அறியமுடிகிறது. பெரிய மரக்கலங்களில் தமிழகத்தில் பொன்' மிகுந்திருப்பதற்கு காரணமாகிய சிறந்த பண்டங்களை ஏற்றிக்கொண்டு வந்தனர் என்பதை

**"பொன் மலிந்த விழுப்பண்டம்**
**நாடார நன்கிழிதரும்**
**ஆடியற் பெருநாவாய்" (மதுரை : 81 – 83)**

மதுரைக்காஞ்சி குறிப்படுவதுடன், இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகளைப் பற்றியும்

**"விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்**
**நனந்தலைத் தேஎத்து நன்கலனுய்மார்**
**புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும்" (மதுரை : 321 – 323)**

கூறுவதை இப்பாடல்வரிகள் வழியாக அறியமுடிகிறது. கப்பலில் வந்திறங்கிய அணிகள் வைக்கப்பட்ட பந்தல்களைப் பற்றி

**"நன் கல வெறுக்கை துஞ்சும் பந்தர்" (பதிற் 55:4)**

எனப் புதிற்றுப்பத்தின் மூலம் இறக்குமதியாகும் அதிகமான பொருள்களைப் பற்றி அறியப்படுகிறது.

**முடிவுரை**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களுடைய நாகரிக வாழ்க்கையின் வழியாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் குவிந்திருக்கும் பண்டங்களையும், தன் தேவைக்கேற்ப, பண்டங்களை வாங்கும் பண்டமாற்று முறைகளையும், வணிகர்களின் நேர்மையான நிலைமையும், பல மொழிகளையும் கற்றறிந்த வணிகர்களின் சிறப்புகளையும், சுங்கத்தின் பணிகளையும் மற்றும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள முடிகிறது. நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் பண்டமாற்று முறைகளின் மூலம் தமக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் அனைத்து நிலங்களில் வாழும் மக்களிடமிருந்து பெற்று சோழநாட்டு மக்கள் மகிழ்ச்சியுடனும் செல்வச்செழிப்புடனும் அறத்துடன்கூடிய பண்டமாற்றுமுறையைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர் என்பதைப் பட்டினப்பாலை இலக்கியம் வாயிலாக தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது.

**மேற்கோள் நூல்கள்**

1. மாணிக்கனார், ஆ. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
2. நாகராசன், வி. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புக். ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
3. சிதம்பரனார், சாமி. தமிழர் வாழ்வும் பண்பாடும், சாரதா பதிப்பகம், சென்னை.
4. தட்சிணாமூர்த்தி, அ. தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை.
5. திருக்குறள், பரிமேலழகர் உரை, அம்சா பதிப்பகம், சென்னை.